தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அன்னூர் வட்டாரம்
ஒட்டர்பாளையம் ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி.பி.விஜயராணி

ந.க.எண்: 1771/2016/ஆ1 நாள்: 28.12.2019

பொருள் : மனைப்பிரிவு -அன்னூர் வட்டாரம் - ஒட்டர்பாளையம் ஊராட்சி -மனைப்பிரிவு க.ச.எண்:363/1 ல் - 1.16 ஏக்கர் பரப்புக் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதிக்கு வரப்பெற்றது - அரசாங்க மதிப்பீடு செலுத்தப்பட்டது - ஊராட்சிக்கு அபிவிருத்தி மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டு கட்டணம் செலுத்துதல் மற்றும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : 1.நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண்:4065/2018/கோம3 நாள்: 26-9-2019

2.திருமதி.M.ராஜாத்தி அவர்களின் நிலப்பயன்பாட்டு செலுத்திய நாள்: .12.2019

கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டாரம் ஒட்டர்பாளையம் ஊராட்சியில் பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் மனைப்பிரிவுக்கான க.ச.எண்: :363/1 ல் - 1.16 ஏக்கர் பரப்பில் தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்றுள்ளது. அக்கடிதத்தில் கோரப்பட்டபடி 3% விற்பனை மதிப்பில் அரசு கணக்கில் .12.2019 ல் ரூ.16321/- (ரூபாய் பதிணாராயிரத்து முன்னூற்று இருபத்தி ஒன்று மட்டும்) செலுத்தப்பட்டு சலான் பெறப்பட்டுள்ளது மற்றும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய பரீசீலனைக் கட்டணம் ரூ.1000/- செலுத்தப்பட்டுவிட்டது.

மேற்படி மனைப்பிரிவிற்கு விண்ணப்பததாரால் தண்ணீர் வசதி, கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்டது. எனவே மனைப்பிரிவு அங்கீகார எண்: ம.வ./(கோம) எண்:388/2019 - ன்படியும் மனைபிரிவிற்கு இதன் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1.மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் rail corridors, பொது பாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக உயர் மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது.

2.மனைப்பிரிவு கட்டமைப்பு இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு அமைக்காவிடில் அங்கீகாரம் இரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3.இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர் (பொறுப்பு), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு தீர்மானம் ஏற்றி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

P. Vijayakumar 28/3/19

தனி அலுவலர்
ஒட்டர்பாளையம் ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அன்னூர்

பெறுநர்:

திருமதி.M.ராஜாத்தி
க/பெ திரு. மணி முத்து
218/1, விவேகானந்தர் தெரு,
கொட்டிவாக்கம்,
சென்னை - 600 041

நகல்:

1.நகர் ஊரமைப்புத்துறை துணைஇயக்குநர்(பொ)
டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர்.

2.சார்பதிவாளர் அலுவலகம்,
அன்னூர்